**O.S.78 of 2022**

Date : 03.03.2026.

வா.சா.1 : **சண்முகசுந்தரம்**

<u>வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு பூர்வீகம் வடக்கு விஜயநாராயணம். தாவா கோவிலை வழிபடும் பகதர் என்ற நிலையில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி கோவிலில் நிர்வாகியோ, காரிய தரிசியோ, டிரஸ்டியோ இல்லை என்றால் சரிதான். மேற்படி கோவில் இந்து சமய அறநிலைத்துறைக்கு பாத்தியப்பட்டதா என்றால் இல்லை. தனிநபர் கோவிலாகும். குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் இல்லை. பல்வேறு சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது. தாவா திருக்கோவில் கட்டிடங்கள் எத்தனை செண்ட் இடத்தில் உள்ளது என்றால் கட்டிடங்கள் சுமார் 1/2 ஏக்கர் நிலத்தில் உள்ளது. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு திரு நாமசெல்வி , ஜார்ஜ் நாடார் ஆகிய இரண்டு நபர்களக்கு மட்டும் வழக்கு முன்னறிவிப்பு அனுப்பப்ட்டது என்றால் சரிதான். பிராதில் தெரிவித்துள்ள D1 to D3 மற்றும் D5 க்கு வழக்கு நோட்டிஸ் அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கின் முன்னறிவிப்பிற்கு தகவல் சொன்னது நான்தான் என்றால் சரிதான். என்னை தவிர சின்னதம்பி, மணிப்பாண்டியன், ராஜகோபால், சுடலைக்கண்ணு, கார்த்தீசன், தர்மராஜ், இளங்கோவன், முத்தையா மற்றும் துரைராஜ் ஆகியோர்கள் வழக்கிற்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆனால் நான் அவர்களை வாதிகளாக குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் அவர்களும் சேர்ந்துதான் வழக்கு போட வந்தார்கள். வழக்கில் அவர்கள் கையொப்பமும், தரப்பினர்களாகவும் இல்லை என்றால் சரிதான். வழக்கு முன்னறிவிப்பு வா.சா.ஆ.8, வா.சா-ஆ 9 தபசில் விவரத்தில் விஜயநராயணம் கிராமம் பகுதி - II ல் சர்வே எண்.448 /5 B ல் கண்ட 4.75 ஹெக்டேர் நிலம் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நான்கு மால் எல்கைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 448/5 B ல் 12 ஏக்கர் 75 செண்டில் நான் மேலே கூறியபடி 50 செண்டு கட்டிடத்தை தவிர மீதி செண்டில் விவசாய நிலமாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும் விவசாய நிலமாக இருந்து வருகிறது என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

விஜயநாராயண கிராமத்தில் லெட்சுமண குமாரசுவாமி மார்த்தாண்ட பிள்ளை என்பவர் மிகப்பெரிய நிலச்சுவான்தார் என்றால் சரிதான். அவருக்கு விஜயநாராயணம் கிராமத்தில் ஏகப்பட்ட நிலங்கள் உண்டு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-1 பட்டாவில் மேற்படி லெட்சுமண குமாரசுவாமி மார்த்தாண்ட பிள்ளையின் மகன் சரவண மார்த்தாண்ட பிள்ளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் பட்டாவில் 2 ம் நபராக 5 ம் பிரதிவாதியின் தாயார் ராஜேஷ்வரி அம்மாள் பெயர் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் இல்லாத கேப்ரியேல் நாடார் மனைவி சரோஜினி என்பவர் யார் என்றால் எனக்கு தெரியாது. பட்டாவை பார்க்கும் போது அவர்கள் யார் என்று நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. இந்த வழக்கு தாவா சர்வே எண்ணிற்கும் வா.சா.ஆ.1 பட்டா எண்.154 க்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். பின்பு ஏன் நான் மேற்படி பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எல்கைமால் க்காக இந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். இந்த பட்டாவில் அவ்வாறு எல்கை மால் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 என்ன பயிர் பயிர்செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பதற்கானது என்றும் ஆனால் அதில் எந்த விவரமும் இல்லை என்றால் அதில் எந்த பயிரும் இல்லை. சாஸ்தா கோவில் வகையறா என்று மட்டும் போட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவில் 700 ஆண்டுகள் பழமையானது என்பதை காண்பிப்பதற்கான வா.சா.ஆ 2 தவிர வேறு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் கல்வெட்டினை பார்வையிட்டு குறிப்பிட்டுள்ளோம். கல்வெட்டை பார்வையிட்டு குறிப்பிட்டுள்ளதற்கு ஆதாரமாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 போட்டோ மற்றும் சிடி சிவசங்கரமார்த்தாண்டம் பிள்ளை குருக்கள் அவர்கள் தலைமையில்தான் கோவில் கும்மாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். தாவா அறிவிப்பு வா.சா.ஆ.7 ஐ 30.12.2021 ம் தேதியிட்டு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு என்னென்ன வில்லங்கம் இருக்கிறது என்று நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். சர்வே எண்.448/5B ல் 1 வது பதிவாக 05.09.1975 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் சண்முக மார்த்தாண்டம் என்பவர் மூலம் சரோஜினி என்பவர் 2 ஏக்கர் 28 செண்டு கிரையம் பெற்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். 15.09.1975 ம் தேதியிட்ட மேற்கண்ட சண்முக

மார்த்தாண்ட பிள்ளை என்பவரிடம் 5 பிரதிவாதியின் தாயார் ராஜேஷ்வரி அம்மாள் கிரையம் வாங்கி விவரம் தெரியவரும் என்றால் சரிதான். 01.03.1979 ம் தேதியிட்டு மேற்கண்ட சரவண மார்த்தாண்டம் பிள்ளை என்பவரிடம் இருந்து அன்ன பழ நாடார் என்பவர் தாவா சர்வே எண்ணில் இருந்து 3 ஏக்கர் நிலத்தை கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 08.01.1998 ம் தேதியில் தங்கராஜ் நாடார் என்பவர் இட்டமொழி வேளாண்மை தொடக்க கூட்டுறவு இ 436 வங்கியில் தாவா சொத்து மற்றும் வேறு சொத்துக்களையும் சேர்த்து அடமானம் வைத்துள்ளார் என்றால் சரிதான். தங்கராஜ் நாடார், சந்திரன் நாடார், ராஜா நாடார், துரைப்பாண்டி நாடார் ஆகிய நான்கு பேரும் சேர்ந்து அவர்கள் சகோதரர் பால் துரை நாடாருக்கு 3 ஏக்கர் விடுதலை கொடுத்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 28.10.2009 ம் தேதியிட்டு சரோஜினி என்பவர் தர்மராஜ் என்பவருக்கு 2 ஏக்கர் 28 செண்டு நிலத்தை கிரையம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்கண்ட கிரையம் பெற்ற நபர்களிடம்தான் கிரைய சொத்து அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் கோவில் அனுபவத்தில்தான் இருக்கிறது. நான் சொல்வது தவறு என்றும் கிரையம் பெற்ற நபர்கள் அனைவரும் நான்கு மால் எல்கை குறிப்பிட்டு கிரையம் பெற்று பட்டா ஏற்பட்டு தீர்வை செலுத்தி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ-7 வில்லங்க சான்று எடுத்துப்பார்த்த பின்புதான் வழக்கு முன்னறிவிப்பு வா.சா.ஆ-8 , வா.சா.ஆ-9 அனுப்பினேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை நான் வழக்கு முன்னறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான், மேற்படி விவரங்களை சொல்லாமல் இருந்ததற்கு தனிப்பட்ட காரணங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. வா.சா.ஆ-10, வா.சா.ஆ-11 பதில் அறிவிப்பில் 1 முதல் 4 மற்றும் 5 ம் பிரதிவாதி முன்னோர்கள் சண்முக மார்த்தாண்ட பிள்ளை அவர்களிடம் இருந்து கிரையம் பெற்ற விவரத்தை தெரிவித்து கிரையம் பெற்ற காலம் முதல் தற்போது வரை அவர்கள் அனுபவத்தில்தான் இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அனுபவம் கோவிலில்தான் இருக்கிறது. வா.சா.ஆ.7 ல் வில்லங்க சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 5 பிரதிவாதிகளின் முன்னோர்கள் தவிர சரோஜினி , தங்கராஜ் நாடார், பால்துரை நாடார் மற்றும் தர்மராஜ் ஆகியோர்கள் கிரையம் பெற்றிருந்தும் அவர்களை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபின்பு பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி எதிர் வழக்குரையை எதிர்ப்பு தெரிவித்து பதில் எதுவும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். UDR க்கு முன்பு வருவாய் துறை ஆவணமான Re survey and Re settlement எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் Re survey and Re settlement சர்வே எண்.448/5 இராமசுப்பிரமணிய மார்த்தாண்டம் பிள்ளை, லெட்சுமண குமார சுவாமி மார்த்தாண்டம் பிள்ளை பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது **பி.சா.ஆ.1** ஆகும். பி.சா.ஆ.1 ஆக குறிப்பிட்டுள்ள மற்ற சர்வே எண்களில் துலங்கப்படும் பட்டாதாரர்களின் பெயர்களும் மற்ற வகையறாக்கள் பெயர்களும்தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சர்வே எண்கள் உட்பட பி.சா.ஆ-1 ல் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற சர்வே எண்கள் லெட்சுமண குமார சுவாமி மார்த்தாண்டம் பிள்ளை வகையறா பண்ணையார்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி வகையறாக்களிடம் தான் 5 ம் பிரதிவாதிவாதியின் தாயார் இராஜேஷ்வரி அம்மாள் 1 முதல் 4 பிரதிவாதிகளின் முன்னோர்கள் அன்னப்பழ நாடார் ஆகியோர்கள் தனித்தனி கிரைய ஆவணம் மூலம் சரியான பிரதிபிரயோஜனம் கொடுத்து கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. கோவில்தான் அனுபவம் செய்து வருகிறது. மேற்படி வாதி கோவில் கட்டிடங்கள் அமைந்துள்ள நிலமானது ஆதியில் மேற்கண்ட லெட்சுமண குமார சுவாமி மார்த்தாண்டம் பிள்ளை வகையறாக்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதியின் தாயார் ராஜேஷ்வரி அம்மாள் தாவா சொத்தின் பக்கத்தில் உள்ள சர்வே 447/4A, 448/3, 448/4A, 447 நிலங்களை தாவா சொத்தோடு கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் பக்கத்தில் உள்ள சொத்தைதான் அனுபவம் செய்து வருகிறார். நான் சொல்வது தவறு என்றும் தாவா சொத்தையும் சேர்த்து அனுபவம் செய்து வருகிறார் என்றார் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.6 ஆவணம் எந்த தேதி எந்த மாதம் எந்த வருடம் என்று குறிப்பிட்டு காணப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் எழுதப்பட்டுள்ள 33 பக்கத்தில் உள்ள கையெழுத்தும் ஒரே நபரினுடையதுதான் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் நன்கொடை கொடுத்ததாகவோ, எந்த ஒரு பதிவும் காணப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-6 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணத்தில் மேற்படி கோவிலின் காப்பாளர் கூட்டம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழிபடும் பக்தர்கள் என்ற நிலையில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழிபடும் பக்தர்கள் என்பது வேறு காப்பாளர்

என்பது வேறு என்றால் காப்பாளர் என்ற நிலையில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கில் எந்த ஒரு பகுதியிலும் காப்பாளர் என்று சொல்லவில்லை என்றால் நாங்கள் சொல்லியுள்ளோம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக O1R8 ன் படி மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மனுவில் தாவா கோவிலில் வழிபடும் பக்தர்கள் என்று கூறிதான் அந்த மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாவா கோவிலின் காப்பாளரோ, டிரஸ்டியோ, நிர்வாகியோ இல்லை என்றால் நாங்கள் காப்பாளர் ஆவோம். வா.சா.ஆ-8 மற்றும் வா.சா.ஆ.9 சட்ட முன்னறிவிப்புகள் தனித்தனியாக அனுப்புவதற்கு காரணங்கள் பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் எங்கேயும் சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த கோவிலை எந்த வருடத்தில் இருந்து நிர்வாகம் செய்து வருகிறோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம். நான் எங்கேயும் சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கோவில் நிலம் வாதி கோவிலுக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா கோவில் நிலம் வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று நான் கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கிரையம் பெற்ற விவரத்தை சொல்லியிருந்தும் அதனை மறுத்து பதில் எதுவும் தாக்கல் செய்யாமல் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதை நன்கு தெரிந்திருந்தும் அதனை மறைத்து கோவிலுக்கு பாத்திய்யப்பட்டது என்று உண்மைக்கு மாறாக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு விவரம் தெரிந்த எந்த வயதில் இருந்து கோவிலை வழிபட்டு வருகிறேன் என்றால் கடந்த 15 வருடங்களாக வழிபட்டு வருகிறோம். கோவிலில் பூஜை செய்வது யார் என்றால் குருக்கள் வகையறாவும், ஆசாரி வகையறாவும் ஆகும். என்னிடம் காட்டப்படும் கல்வெட்டு புகைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருப்பணி வேலை நடத்தியவர்கள் பரம்பரை பூசாரிகள், நிர்வாகிகள் திரு. குப்புசாமி குருக்கள், திரு.சோ. சொக்கலிங்கம் குருக்கள், திரு பொன்னையா குருக்கள், சுப்பிரமணிய குருக்கள், சங்கர் குருகள், வேல்முருகன் குருக்கள் ஆகியோர்களால் நன்கொடை வசூலிக்கப்பட்டு 1997 ம் வருடம் திருக்கோவில் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது என்றால் சரிதான்.அந்த கல்வெட்டு புகைப்படம் **பி.சா.ஆ.2** ஆகும். மேற்கண்ட குருக்கள் வகையறாக்கள்தான் கோவில் திருவிழாக்களை நடத்தி நிர்வாகம் செய்து

வருகிறார்கள் என்றால் முன்னாடி அவர்கள் செய்தார்கள். அதன்பின்பு நாங்கள் காப்பாளர் முறையில் நிர்வாகம் செய்து வருகிறோம். காப்பாளர் முறையில் நிர்வாகம் செய்து வருகிறோம் என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்துள்ளோம். தாவா கோவில் சம்மந்தமாக ஏதேனும் பரிகாரம் கேட்க வேண்டுமானால் மேற்கண்ட நபர்கள் கேட்கமுடியும் என்றும் எனக்கு எந்த பரிகாரமும் கேட்க உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் குமாரர் பார்த்தசாரதி என்ற நபரை பதில் அறிவிப்பில் தெரிவித்த பின்பு அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் வழக்கு அவசியமான தரப்பினரை சேர்க்காத காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 வில்லங்க சான்றில் கண்ட எல்லா தரப்பினர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் வழக்கு அவசியமான தரப்பினரை சேர்க்காத காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி 1975 ல் கிரையம் பெற்றும் 50 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருவதால் இவ்வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லியிருக்கும் வழக்கு மூலம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ 14 என்னால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழிபடும் பக்தர்கள் என்ற நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.